NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p10
**Date:** 11 February 2018

# பெண்களைக் கொண்டாடும் இளையர்களின் இசைநிகழ்ச்சி

சுதாஸகி ராமன்




பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் இசைக்குழுவினர். **படம்: தேசியப் பல்கலைக்கழகத்தின் இந்திய இசைக்குழு**

பெண்களுக்கு சமூகம் நன்றி கூறுவதன் முக்கியத்துவம், அவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களின் சாதனை என்று பெண்களைக் கொண்டாடும் இசை நிகழ்ச்சியை விரைவில் இசைப்பிரியர்கள் ரசிக்கலாம்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் இந்திய இசைக் குழு படைக்கும் இசை நிகழ்ச்சி, அதில் இடம்பெறவுள்ள பாடல்களின் மூலம் பெண்கள் வாழ்வின் பல பரிமாணங்களை எடுத்துரைக்கவுள்ளது.

'ஐ அம்' என்ற தலைப்பில் எஸ்பிளனேட் கலை அரங்கில் நாளை இரவு 7.30 மணிக்கு அரங்கேறவுள்ள இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் இளநிலைப் பட்டக் கல்வி மாணவர்களும் முன்னாள் மாணவர்களும் ஒன்று சேர்ந்து இசைமழை பொழிய உள்ளனர்.

பாரம்பரிய கர்நாடக இசை, இந்துஸ்தானி இசையின் மூலம் ஆண்களுக்கு நிகராக பெண்களும் உள்ளனர் என்பதையும் பெண்களில்லாமல் சமூகம் உயர்வு அடையாது எனும் முக்கிய கருத்துகளை இசைக் குழு முன்வைக்கவுள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக இந்நிகழ்ச்சியைப் படைப்பதில் கடுமையாக உழைத்து வரும் இசைக் குழு பாரதியார், பாரதிதாசன் போன்ற புகழ்பெற்ற தமிழ்க் கவிஞர்களுடன் உள்ளூர் கவிஞர் யூசோஃப் ராவுத்தர் ரஜித் போன்றோரின் கவிதை வரிகளுக்கும் இசை அமைத்து வழங்கவுள்ளது.

"சமுதாய வளர்ச்சிக்கு அமைதியாகப் பாடுபடும் பெண்களைக் கொண்டாடுவது முக்கியமென்று ஆண்கள் அறிந்திருக்க வேண்டும். இசை நிகழ்ச்சியின்வழி மேலும் பல இளையர்கள் இந்தக் கருத்தை உணர்வர்," என்றார் திரு ரஜித், 69.

தமிழ் ஆர்வலரான அவர், கடந்த சுமார் 30 ஆண்டுகளாக கவிதைகள், சிறுகதைகள் எழுதி வருகிறார். தமது படைப்புகளில் பெண்ணியத்தைப் பற்றி அவர் விரிவாக எழுதி வருகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு இசை அமைப்பவர்களில் ஒருவர் தம்மை நாடியதால் 'பெண் விடுதலை' எனும் இந்தக் அவர் குறிப்பிட்டார்.

"இந்தத் தலைப்பில் உடன்பாடு இருந்ததால் வேகமாக இரு நாட்களில் எழுதி முடித்தேன்," என்றார் அவர்.

பல்கலைக்கழகத்தில் சேர்ந்து புதிய திறனைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக இசைக் குழுவுடன் சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இணைந்த பல்கலைக்கழக முன்னாள் மாணவி அர்ச்சனா முருகானந்தம், 11வது முறையாக குழுவுடன் இசை நிகழ்ச்சியைப் படைக்க உள்ளார்.

"இந்தியப் பாரம்பரிய இசையைப் பற்றி எதுவும் தெரியாத எனக்கு பயிற்சி அளித்து, மேடையேறி வாசிக்கும் அளவிற்கு வாய்ப்புகளையும் அளித்துள்ள இக்குழு, இந்த நிகழ்ச்சியில் பல நுணுக்கங்களைக்கொண்ட இசையை வழங்க உள்ளது," என்றார் அவர்.

மொத்தம் 18 இசைக் கலைஞர்களால் அரங்கேற்றப்படும் இந்தப் படைப்புக்கு உள்ளூர், இந்திய இசைக் கலைஞர்கள் இசை அமைத்துள்ளனர்.

மேல் விவரங்களுக்கு https://www.facebook.com/nusiie/ என்ற 'ஃபேஸ்புக்' பக்கத்தை நாடலாம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.